# சிதம்பரம் நகராட்சி

**2021 ம் ஆண்டு மார்கழி திங்கள் 16–ம் நாள் 31.12.2021 வெள்ளி கிழமை மாலை 04.30 மணியளவில் நடைபெறும் சாதாரண நகர்மன்ற கூட்டம்**

**மன்றக்கூட்டப் பொருள்**

**1)** சிதம்பரம் நகராட்சி பொது நிதி 2020–21–ன் கீழ் இந்நகராட்சி துப்புரவு பணியாளர் குடியிருப்புக்கு புதிதாக இரண்டு ஆழ்துளை கிணறு அமைத்து தண்ணீர் வசதி ஏற்படுத்தும் பணிக்கு ரூ. 7.00 இலட்சத்திற்கு 28.07.2020 ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 30.07.2020–ல் பணி உத்தரவு வழங்கப்பட்டது. ஆனால் இதுநாள்வரை பணியானது தொடங்கப்படாமல் உள்ளது.காலதாமதம் குறித்து ஒப்பந்ததாரருக்கு 10.11.2021 இறுதி அறிவிப்பு வழங்கப்பட்டது. மேலும் இதுநாள்வரை ஒப்பந்ததாரர் எழுத்து பூர்வ விளக்கம் ஏதும் அளிக்காமலும் பணியினை முடிக்காமலும் காலம் தாழ்த்தி வருகிறார். மேலும் ஒப்பந்ததாரரின் இச்செயலால் திட்டத்தை முழுவதும் முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவர இயலாத நிலையில் உள்ளது. இதனால் நகராட்சிக்கு அவப்பெயர் ஏற்படுவதோடு, வருவாய் இழப்பு ஏற்படுகிறது. இந்த நிதி இழப்பை தவிர்க்கும்பொருட்டு மேற்படி ஒப்பந்தத்தை இரத்து செய்து பணியினை மறு ஒப்பந்தப்புள்ளி கோரி பணியை முடிக்கவும் இதனால் நகராட்சிக்கு ஏற்படும் கூடுதல் செலவினத்தை ஒப்பந்ததாரின் வைப்புத்தொகையில் ஈடு செய்து கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.2201/2020/இ1**

**2)** சிதம்பரம் நகராட்சி மற்றும் அண்ணாமலை நகர் பேரூராட்சிக்கு கொள்ளிடம் ஆற்றினை நீர் ஆதாரமாக கொண்டு 127 கோடி மதிப்பீட்டில் கூட்டு குடிநீர் அபிவிருத்தி திட்டம் 2021–2022ல் செயல்படுத்த சட்ட மன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்பினை நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது மாவட்ட ஆட்சியரின் அறிவுறுத்தலின்படி கீழ்காணும் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கு, வரப்பெற்ற பட்டியல் தொகையை வருவாய்நிதி 2021–2022ன் கீழ் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | நாளிதழ்விபரம் | விளம்பரநாள் | தொகை |
|---|---|---|---|
| 1 | தினசெய்தி | 26.10.2021 | 10000 |
| | | **கூடுதல்** | 10000 |

**அலுவலகக் குறிப்பு :**மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3254/2021/இ1)**

**3)** சிதம்பரம் நகராட்சியால் கோவை நகரில் பயிற்சிக்கு ஆண்டு சந்தா தொகை 2019–2020 வரை நிலுவை தொகை ரூ.180000/– மற்றும் 2021–2022 வரை ரூ. 125000/– மொத்தம் ரூ.305000/– செலுத்திமாறு தமிழ்நாடு கோவை நகரியல் பயிற்சி நிலையம் இயக்குநர் அவர்களால் ந.க.எண்.276/2020/அ2, நாள்.08.12.2021ந் தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்தொகையை வங்கிவரைவோலையாக கோவை நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு செலுத்த மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 3331/2021/சி1**

**4)** இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்காணும் பணியினை செய்ய **10.12.2021** அன்று **இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி** (O&M Gap filling fund)**2021–2022–ன்கீழ்**ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| **வ. எண்.** | **பணியின் விபரம்** | **ஒப்பந்ததாரர்கள் பெயர் விபரம்** | **மதிப்பீட்டு தொகை ரூ.** | **ஒப்பந்த சதவீதம் குறைவு** | **ஒப்பந்த சதவீதம் அதிகம்** |
|---|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** | **6** |
| | **இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி** (O&M Gap filling fund)**2021–2022** | | | | |
| **1** | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 19, கீழரத வீதியில் உள்ள பொதுகழிவறையினை சிறப்பு பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு செய்யும் பணி. | **திருமதி கே.முத்துலட்சுமி,** ஒப்பந்ததாரர், பணங்காடு. | 8,75,000/– | மதிப்பீட்டு விலையை விட 0.41% குறைவு | –– |
| | | **திரு.எஸ்.கிருஷ்ணமூர்த்தி,** ஒப்பந்ததாரர், நாஞ்சலூர். | | –– | மதிப்பீட்டு விலையை விட 0.74% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் எண்.5–ல் கண்டுள்ளபடி **திருமதி.கே.முத்துலட்சுமி** என்ற ஒப்பந்ததாரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலையைவிட **0.41%** குறைவாக உள்ளதால் மன்றம் ஏற்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :**

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 3185/2021/இ1**

**5)** இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்காணும் பணியினை செய்ய **10.12.2021** அன்று **இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி** (O&M Gap filling fund) **2021–2022–ன்கீழ்**ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர்கள் பெயர் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்த சதவீதம் குறைவு | ஒப்பந்த சதவீதம் அதிகம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | **இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி** (O&M Gap filling fund)**2021–2022** | | | | |
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 18, மேலரத வீதியில் உள்ள பொதுகழிவறையினை சிறப்பு பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு செய்யும் பணி. | **திருமதி கே.முத்துலட்சுமி,** ஒப்பந்ததாரர், பணங்காடு. | 5,25,000/– | மதிப்பீட்டு விலையை விட 0.42% குறைவு | –– |
| | | **திரு.எஸ்.கிருஷ்ணமூர்த்தி,** ஒப்பந்ததாரர், நாஞ்சலூர். | | –– | மதிப்பீட்டு விலையை விட 0.84 % அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் எண்.5–ல் கண்டுள்ளபடி **திருமதி.கே.முத்துலட்சுமி** என்ற ஒப்பந்ததாரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலையைவிட 0.42% குறைவாக உள்ளதால் மன்றம் ஏற்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :**

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 3185/2021/இ1**

**6)** இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்காணும் பணியினை செய்ய 10.12.2021 அன்று **இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி** (O&M Gap filling fund)**2021–2022–ன்கீழ்**ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர்கள் பெயர் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்த சதவீதம் குறைவு | ஒப்பந்த சதவீதம் அதிகம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | **இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி** (O&M Gap filling fund)**2021–2022** | | | | |
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 10, லால்கான் தெருவில் உள்ள பொதுகழிவறையினை சிறப்பு பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு செய்யும் பணி. | **திருமதி கே.முத்துலட்சுமி,** ஒப்பந்ததாரர், பணங்காடு. | 3,40,000/– | மதிப்பீட்டு விலையை விட 0.34 % குறைவு | –– |
| | | **திரு.எஸ்.கிருஷ்ணமூர்த்தி,** ஒப்பந்ததாரர், நாஞ்சலூர். | | –– | மதிப்பீட்டு விலையை விட 0.85 % அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் எண்.5–ல் கண்டுள்ளபடி **திருமதி.கே.முத்துலட்சுமி** என்ற ஒப்பந்ததாரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலையைவிட 0.34% குறைவாக உள்ளதால் மன்றம் ஏற்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்
2) பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 3185/2021/இ1**

**7)** இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்காணும் பணியினை செய்ய **10.12.2021** அன்று **இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி** (O&M Gap filling fund)**2021–2022–ன்கீழ்**ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| **வ. எண்.** | **பணியின் விபரம்** | **ஒப்பந்ததாரர்கள் பெயர் விபரம்** | **மதிப்பீட்டு தொகை ரூ.** | **ஒப்பந்த சதவீதம் குறைவு** | **ஒப்பந்த சதவீதம் அதிகம்** |
|---|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** | **6** |
| | **இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி** (O&M Gap filling fund)**2021–2022** | | | | |
| **1** | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 1, பைபாஸ் சாலையில் உள்ள சமூதாய கழிவறையை சிறப்பு பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு செய்யும் பணி. | **திரு.எஸ்.கிருஷ்ணமூர்த்தி,** ஒப்பந்ததாரர், நாஞ்சலூர். | 10,00,000/– | மதிப்பீட்டு விலையை விட 0.31 % குறைவு | –– |
| | | **திருமதி கே.முத்துலட்சுமி,** ஒப்பந்ததாரர், பணங்காடு. | | –– | மதிப்பீட்டு விலையை விட 2.62 % அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் எண்.5–ல் கண்டுள்ளபடி **திரு.எஸ்.கிருஷ்ணமூர்த்தி,** என்ற ஒப்பந்ததாரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலையைவிட 0.31% குறைவாக உள்ளதால் மன்றம் ஏற்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :** 1)மன்றம் அனுமதிக்கலாம்
2) பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 3185/2021/இ1**

**8)** இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்காணும் பணியினை செய்ய **10.12.2021** அன்று **இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி** (O&M Gap filling fund)**2021–2022–ன்கீழ்** ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்கண்ட பணிக்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| **வ. எண்.** | **பணியின் விபரம்** | **ஒப்பந்ததாரர்கள் பெயர் விபரம்** | **மதிப்பீட்டு தொகை ரூ.** | **ஒப்பந்த சதவீதம் குறைவு** | **ஒப்பந்த சதவீதம் அதிகம்** |
|---|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** | **6** |
| | **இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி** (O&M Gap filling fund)**2021–2022** | | | | |
| **1** | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 15, குஞ்சிரமூர்த்தி விநாயகர் கோவில் தெருவில் உள்ள சமூதாய கழிவறையை சிறப்பு பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு செய்யும் பணி. | **திருமதி.ஆர்.கோமதி,** ஒப்பந்ததாரர், சிதம்பரம். | 5,75,000/– | மதிப்பீட்டு விலையை விட 0.33% குறைவு | –– |
| | | **திருமதி கே.முத்துலட்சுமி,** ஒப்பந்ததாரர், பணங்காடு. | | –– | மதிப்பீட்டு விலையை விட 0.54% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் எண்.5–ல் கண்டுள்ளபடி **திருமதி.ஆர்.கோமதி,** என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலையைவிட 0.33% குறைவாக உள்ளதால் மன்றம் ஏற்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :** 1)மன்றம் அனுமதிக்கலாம்
2) பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 3185/2021/இ1**

**9)** இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்காணும் நகராட்சி பள்ளியில் பழுது மற்றும் பராமரிப்பு பணியினை செய்ய 10.12.2021 அன்று **கல்வி நிதி 2021–22–ன்கீழ்**ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர்கள் பெயர் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்த சதவீதம் குறைவு | ஒப்பந்த சதவீதம் அதிகம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | கல்வி நிதி 2021–22 | | | | |
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 14, திரௌபதி அம்மன் கோவில் தெரு ஆரம்பபள்ளி கட்டிடம் சிறப்பு பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு செய்யும் பணி. | **திருமதி கே.முத்துலட்சுமி,** ஒப்பந்ததாரர், பணங்காடு. | 9,60,000/– | மதிப்பீட்டு விலையை விட0.50% குறைவு | –– |
| | | **திரு.எஸ்.கிருஷ்ணமூர்த்தி,** ஒப்பந்ததாரர், நாஞ்சலூர். | | –– | மதிப்பீட்டு விலையை விட 0.98% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் எண்.5–ல் கண்டுள்ளபடி **திருமதி.கே.முத்துலட்சுமி**என்ற ஒப்பந்ததாரின்குறைந்த ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலையை விட 0.50% குறைவாக உள்ளதால் மன்றம் ஏற்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :** 1)மன்றம் அனுமதிக்கலாம்
2) பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.3185/2021/இ1**

**10)** இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்காணும் நகராட்சி பள்ளியில் பழுது மற்றும் பராமரிப்பு பணியினை செய்ய 10.12.2021 அன்று **கல்வி நிதி 2021–22–ன்கீழ்**ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர்கள் பெயர் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்த சதவீதம் குறைவு | ஒப்பந்த சதவீதம் அதிகம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | கல்வி நிதி 2021–22 | | | | |
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 30, கனகசபை நகர் நகராட்சி ஆரம்ப பள்ளி கட்டிடம் சிறப்பு பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு செய்யும் பணி. | **திருமதி கே.முத்துலட்சுமி,** ஒப்பந்ததாரர், பணங்காடு. | 9,90,000/– | மதிப்பீட்டு விலையை விட 0.29 % குறைவு | –– |
| | | **திரு.எஸ்.கிருஷ்ணமூர்த்தி,** ஒப்பந்ததாரர், நாஞ்சலூர். | | –– | மதிப்பீட்டு விலையை விட 0.72% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் எண்.5–ல் கண்டுள்ளபடி **திருமதி.கே.முத்துலட்சுமி** என்ற ஒப்பந்ததாரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட, 0.29% குறைவாக உள்ளதால் மன்றம் ஏற்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :** 1)மன்றம் அனுமதிக்கலாம்
2) பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 3185/2021/இ1**

**11)** இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்காணும் நகராட்சி பள்ளியில் பழுது மற்றும் பராமரிப்பு பணியினை செய்ய 10.12.2021 அன்று **கல்வி நிதி 2021–22–ன்கீழ்**ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர்கள் பெயர் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்த சதவீதம் குறைவு | ஒப்பந்த சதவீதம் அதிகம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | கல்வி நிதி 2021–22 | | | | |
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 9, அம்பலத்தாடி மடத்தெரு ஆரம்பபள்ளி கட்டிடம் சிறப்பு பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு செய்யும் பணி. | **திருமதி கே.முத்துலட்சுமி,** ஒப்பந்ததாரர், பணங்காடு. | 7,00,000/– | மதிப்பீட்டு விலையை விட 0.48% குறைவு | –– |
| | | **திரு.எஸ்.கிருஷ்ணமூர்த்தி,** ஒப்பந்ததாரர், நாஞ்சலூர். | | –– | மதிப்பீட்டு விலையை விட 1.37% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் எண்.5–ல் கண்டுள்ளபடி **திருமதி.கே.முத்துலட்சுமி** என்ற ஒப்பந்ததாரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலையைவிட 0.48% குறைவாக உள்ளதால் மன்றம் ஏற்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :** **1)**மன்றம் அனுமதிக்கலாம்
2) பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 3185/2021/இ1**

**12)** இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்காணும் நகராட்சி பள்ளியில் பழுது மற்றும் பராமரிப்பு பணியினை செய்ய 10.12.2021 அன்று **கல்வி நிதி 2021–22–ன்கீழ்**ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர்கள் பெயர் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்த சதவீதம் குறைவு | ஒப்பந்த சதவீதம் அதிகம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | கல்வி நிதி 2021–22 | | | | |
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 22, கொத்தங்குடி தெரு நடுநிலைப்பள்ளி கட்டிடம் சிறப்பு பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு செய்யும் பணி. | **திருமதி கே.முத்துலட்சுமி,** ஒப்பந்ததாரர், பணங்காடு. | 9,50,000/– | மதிப்பீட்டு விலையை விட 0.32% குறைவு | –– |
| | | **திரு.எஸ்.கிருஷ்ணமூர்த்தி,** ஒப்பந்ததாரர், நாஞ்சலூர். | | –– | மதிப்பீட்டு விலையை விட 0.50% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் எண்.5–ல் கண்டுள்ளபடி **திருமதி.கே.முத்துலட்சுமி** என்ற ஒப்பந்ததாரின்குறைந்த ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.32% குறைவாக உள்ளதால் மன்றம் ஏற்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :** **1)**மன்றம் அனுமதிக்கலாம்
2) பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 3185/2021/இ1**

**13)** **மாநில பேரிடர் மேலாண்மை நிதி** (SDRF) 2021–2022–ன் கீழ்சிதம்பரம் நகரில் வடகிழக்கு பருவமழை **2021–ல்** கனமழையினால் பாதித்த சாலைகளை தற்காலிகமாக பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை ந.க.எண். **31442/2021/இ3,** நாள் **15.12.2021** –ந் தேதியில் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள ரூ.**26.00** இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | **பணியின் பெயர்** | **மதிப்பீட்டு தொகை (ரூ.லட்சத்தில்)** |
|---|---|---|
| 1 | சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.**4**, நடராஜா கார்டன் பகுதியில் மழையினால் சேதமடைந்த தார்சாலையினை தற்காலிகமாக சீரமைப்பு செய்யும் பணி. (092004R054, 092004R055) | **20.00** |
| 2 | சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.**6**, வாகீச நகர் பகுதியில் மழையினால் சேதமடைந்த சிமெண்ட் சாலையினை தற்காலிகமாக சீரமைப்பு செய்யும் பணி. (092006R094) | **2.00** |
| 3 | சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.**7**, தில்லை நகர் பகுதியில் மழையினால் சேதமடைந்த தார்சாலையினை தற்காலிகமாக சீரமைப்பு செய்யும் பணி. (092007R110, 092007R102) | **1.75** |
| 4 | சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.**32**, அரங்கநாதன் நகர் பகுதியில் மழையினால் சேதமடைந்த தார்சாலையினை தற்காலிகமாக சீரமைப்பு செய்யும் பணி. (092032R315, 092032R317) | **2.25** |

**அலுவலகக் குறிப்பு :**

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) மாநில பேரிடர் மேலாண்மை நிதி (SDRF) 2021–22–ன் கீழ் செலவினம் மேற்கொள்ளவும், மேற்படி திட்டப்பணியின் அவசர அவசியம் கருதியும், நகர்மன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலர் முன் அனுமதிபெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 3466/2021/இ1**

**14)** சிதம்பரம் நகராட்சி பகுதியில் உள்ள மண் சாலைகளை பேவர் பிளாக் சாலைகளாக மாற்றுவதற்கு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுதிட்டம் (KNMT) **2021–22–ன்** கீழ் **132.00** இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து MAWS (NS) Department G.O (ms) No.92, Date : 30.10.**2021–ல்** நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு **30.11.2021** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| **வ. எண்.** | **பணியின் விபரம்** | **ஒப்பந்ததாரர்கள்பெயர் விபரம்** | **மதிப்பீட்டுதொகை ரூ.** | **ஒப்பந்தசத வீதம் குறைவு** | **ஒப்பந்தசதவீதம் அதிகம்** |
|---|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** | **6** |
| | **நகர்ப்புறமேம்பாட்டு திட்டம்–2021-22 (KNMT)** | | | | |
| | **கலைஞர் நகர்ப்புறமேம்பாட்டு திட்டம்–2021-22 (KNMT)** சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட | **திருமதிK.மீனா,** எண்.787, பைரவர் கோவில்தெரு, சிவபுரிஅஞ்சல், | 1,32,00,000/– | –– | மதிப்பீட்டினைவிட 4.50%அதிகம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | டோபிகானா தெரு Unique code-092001R003, தில்லைநாதன் நகர் – Unique code-092001R021 (வார்டு எண்.1) ஆசீர்வாதநகர் 2–வது குறுக்கு தெரு- Unique code-092004R051, அம்மாநகர்– Unique code-092004R077, நடராஜா கார்டன் உட்புற குறுக்குச் சாலைகள்- Unique code - 092004R078 (வார்டு எண்.4) மற்றும் முத்துகிருஷ்ணன் நகர் - Unique code - 092022R229 (வார்டு எண். 22) ஆகிய மண் சாலைகளை பேவர் பிளாக் சாலைகளாக அமைக்கும் பணி. (சிப்பம் –1) | சிதம்பரம் தாலுக்கா. | | | |
| | | **திரு S.கிருஷ்ணமூர்த்தி,** ஒப்பந்ததாரர், நாஞ்சலூர். | | –– | மதிப்பீட்டினைவிட **6.48%**அதிகம் |

1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் எண்.6–ல் கண்டுள்ளபடி 4.50 % மதிப்பீட்டு விலையைவிட **அதிகத்தில் குறைவாக** கொடுத்துள்ள **திருமதிK.மீனா,** ஒப்பந்ததாரர், வசம் ஒப்பந்தப்புள்ளி சதவீதத்தை குறைத்து அளிக்கசம்மத கடிதம் கோரியதில் அவர் ஒப்பந்தப்புள்ளி சதவீதத்தை பொருட்களின் விலையேற்றத்தை கருத்தில்கொண்டு 1.10% குறைத்து 3.40% மதிப்பீட்டைவிட கூடுதலாக செய்துதர சம்மதம் கடிதம் அளித்துள்ளார். எனவே பணியின் அவசரஅவசியம் கருதி, நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

2) மதிப்பீட்டைவிட கூடுதல் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :**

1) அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.
2) மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.2634/2021/இ1**

**15)** இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்காணும் பணியினை செய்ய **31.12.2021** அன்று மாநில பேரிடர் மேலாண்மை நிதி–2021-22(SDRF)**–ன்**கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் மீது கீழ்கண்ட விபரப்படி ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்ததில்

| வ. எ | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர்கள் பெயர் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்த சதவீதம் குறைவு | ஒப்பந்த சதவீதம் அதிகம் |
|---|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** | **6** |
| | **மாநில பேரிடர் மேலாண்மை நிதி–2021-22 (SDRF)** | | | | |
| | சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.4, நடராஜா கார்டன் பகுதியில் மழையினால் சேதமடைந்த தார்சாலையினை தற்காலிகமாக சீரமைப்பு செய்யும் பணி. (092004R054, 92004R055) | **திரு S.கிருஷ்ணமூர்த்தி,** ஒப்பந்ததாரர், நாஞ்சலூர். | 20,00,000/– | மதிப்பீட்டினை விட 0.28%குறைவு | –– |
| | | **திருமதிK.முத்துலட்சுமி,** ஒப்பந்ததாரர்,பணங்காடு சிதம்பரம் தாலுக்கா. | | –– | மதிப்பீட்டினை விட 1.76% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் எண்.5–ல் கண்டுள்ளபடி **0.28%** மதிப்பீட்டு விலையைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள **திரு எஸ்.கிருஷ்ணமூர்த்தி,** என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :**

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2)பணியின் அவசர அவசியம் கருதியும், நகர்மன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலர் முன் அனுமதிபெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.3466/2021/இ1**

**16)** இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்காணும் பணியினை செய்ய **31.12.2021** அன்று மாநில பேரிடர் மேலாண்மை நிதி–2021-22(SDRF)**–ன்**கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் மீது கீழ்கண்ட விபரப்படி ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்ததில்

| **வ. எண்.** | **பணியின் விபரம்** | **ஒப்பந்ததாரர்கள் பெயர் விபரம்** | **மதிப்பீட்டு தொகை ரூ.** | **ஒப்பந்த சதவீதம் குறைவு** | **ஒப்பந்த சதவீதம் அதிகம்** |
|---|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** | **6** |
| | **மாநில பேரிடர் மேலாண்மை நிதி–2021-22 (SDRF)** | | | | |
| | சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.**6**, வாகீச நகர் பகுதியில் மழையினால் சேதமடைந்த சிமெண்ட் சாலையினை தற்காலிகமாக சீரமைப்பு செய்யும் பணி. (092006R094) | **திரு S.கிருஷ்ணமூர்த்தி,** ஒப்பந்ததாரர், நாஞ்சலூர். | 2,00,000/– | மதிப்பீட்டினை விட 0.04%குறைவு | –– |
| | | **திருமதிK.முத்துலட்சுமி,** ஒப்பந்ததாரர், பணங்காடு, சிதம்பரம் தாலுக்கா. | | –– | மதிப்பீட்டினை விட 0.21% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் எண்.5–ல் கண்டுள்ளபடி **0.04%** மதிப்பீட்டு விலையைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள **திரு.எஸ்.கிருஷ்ணமூர்த்தி,** என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதியும், நகர்மன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலர் முன் அனுமதிபெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.3466/2021/இ1**

**17)** இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்காணும் பணியினை செய்ய **31.12.2021** அன்று மாநில பேரிடர் மேலாண்மை நிதி–2021-22(SDRF)**–ன்**கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் மீது கீழ்கண்ட விபரப்படி ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்ததில்

| **வ. எண்.** | **பணியின் விபரம்** | **ஒப்பந்ததாரர்கள் பெயர் விபரம்** | **மதிப்பீட்டு தொகை ரூ.** | **ஒப்பந்த சதவீதம் குறைவு** | **ஒப்பந்த சதவீதம் அதிகம்** |
|---|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** | **6** |
| | **மாநில பேரிடர் மேலாண்மை நிதி–2021-22 (SDRF)** | | | | |
| | சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7, தில்லை நகர் பகுதியில் மழையினால் சேதமடைந்த தார்சாலையினை தற்காலிகமாக சீரமைப்பு செய்யும் பணி. (092007R110, 092007R102) | **திரு S.கிருஷ்ணமூர்த்தி,** ஒப்பந்ததாரர், நாஞ்சலூர். | 1,75,000/– | மதிப்பீட்டினை விட 0.97%குறைவு | –– |
| | | **திருமதிK.முத்துலட்சுமி,** ஒப்பந்ததாரர், பணங்காடு, சிதம்பரம் தாலுக்கா. | | –– | மதிப்பீட்டினை விட 2.99% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் எண்.5–ல் கண்டுள்ளபடி **0.97%** மதிப்பீட்டு விலையைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள **திரு எஸ்.கிருஷ்ணமூர்த்தி,** என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதியும், நகர்மன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலர் முன் அனுமதிபெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.3466/2021/இ1**

**18)** இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்காணும் பணியினை செய்ய **31.12.2021** அன்று மாநில பேரிடர் மேலாண்மை நிதி–2021-22(SDRF)**–ன்கீழ்** ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் மீது கீழ்கண்ட விபரப்படி ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்ததில்

| வ. எண். | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர்கள் பெயர் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்த சதவீதம் குறைவு | ஒப்பந்த சதவீதம் அதிகம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | **மாநில பேரிடர் மேலாண்மை நிதி–2021-22 (SDRF)** | | | | |
| | சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.**32**, அரங்கநாதன் நகர் பகுதியில் மழையினால் சேதமடைந்த தார்சாலையினை தற்காலிகமாக சீரமைப்பு செய்யும் பணி. (092032R315, 092032R317) | **திரு S.கிருஷ்ணமூர்த்தி,**<br>ஒப்பந்ததாரர்,<br>நாஞ்சலூர். | 2,25,000/– | மதிப்பீட்டினை விட 0.10%குறைவு | –– |
| | | **திருமதிK.முத்துலட்சுமி,**<br>ஒப்பந்ததாரர்,<br>பணங்காடு,<br>சிதம்பரம் தாலுக்கா. | | –– | மதிப்பீட்டினை விட 2.24% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் எண்.**5–**ல் கண்டுள்ளபடி **0.10%** மதிப்பீட்டு விலையைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள **திரு எஸ்.கிருஷ்ணமூர்த்தி,** என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதியும், நகர்மன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலர் முன் அனுமதிபெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.3466/2021/இ1**

**19)** **15–வது மான்ய நிதிக்குழு தனித்துவ நிதி** (Specific Grants for Health Sector) **2021–2022–ன்** கீழ் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண். 32454/2021/AMRUT-2, நாள் **17.12.2021** –ந் தேதியில் கீழ்கண்ட பணி மேற்கொள்ள ரூ.**25.00** இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் புதியதாக நகர்ப்புற ஆரோக்கிய மையம் கட்டும் பணி | 25.00 |

**அலுவலகக் குறிப்பு :**

1) மன்றம் பதிவு செய்யலாம்.
2) **15–வது மான்ய நிதிக்குழு தனித்துவ நிதி** (Specific Grants for Health Sector)2021-2022- கீழ் செலவு மேற்கொள்ளவும், திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.3444/2021/இ1**

**20)** சிதம்பரம் நகராட்சி 15.06.1998–லிருந்து தேர்வு நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. 4.82 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட இந்நகராட்சியில் மொத்தம் 33 வார்டுகள் அமைந்துள்ளன. வழிபாட்டு தளம் என அழைக்கப்படும் இந்நகரம் இந்தியாவின் மிக முக்கியமான சுற்றுலா தளமாக விளங்குகிறது. தற்போதைய இந்நகராட்சியின் மொத்தமக்கள் தொகை 64500 இருந்தாலும் ஒருசதுர கிலோமீட்டர் பரப்பளவில் 13381 நபர்கள் வசித்துவருகிறார்கள். இந்நகராட்சியில் 54.756 கிமீ நகராட்சி சாலையும், 8.870 கிமீ நெடுஞ்சாலைத் துறை சாலைகளும் ஆக மொத்தம் 62.386 கிமீ சாலைகள் உள்ளது.

இந்நகருக்கு தினசரி வந்து செல்லும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 25000–க்கு மேல் உள்ளது. மேலும், நடராஜர் கோயில் தேர்திருவிழா காலங்களில் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை தினசரி 50000 மேல் உள்ளது.

இந்நகராட்சி பகுதியில் கீழ்கண்டவாறு தெருவிளக்குகள் அமைந்துள்ளன.

| | | |
|---|---|---|
| 1 | 40 வாட்ஸ் குழல்விளக்குகள் | 1278 |
| 2 | 20 வாட்ஸ் CFL விளக்குகள் | 14 |
| 3 | 35 வாட்ஸ் CFL விளக்குகள் | 18 |
| 4 | 45 வாட்ஸ் CFL விளக்குகள் | 36 |
| 5 | 85 வாட்ஸ் CFL விளக்குகள் | 130 |
| 6 | 250 வாட்ஸ் சோடியம் ஆவிவிளக்குகள் | 405 |
| 7 | HML | 15 |
| | மொத்தம் | 1896 |

இந்நகர் வணிமையமாகமாறி வருவதால் சுற்றுபுற கிராமமக்கள் இந்நகருக்கு குடிபெயர்ந்து வருவதாலும் அண்ணாமலை பல்கலைகழகத்தில் பயிலவரும் மாணவர்களின் தங்குமிட வசதிக்கு அடுக்குமாடி குடியிருப்புகள் பெருகுவதோடு நகரில் கட்டிடமில்லா காலியிடங்கள் அரசின் அனுமதி பெற்ற வரையறுக்கப்பட்ட மனை பிரிவுகளாகமாறி வருகின்றன.

இந்நகரின் பொதுமக்கள் இரவு நேர போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு நலனுக்காக அடிப்படை வசதியான தெருவிளக்கு வசதி 62.386 கிமீ சாலைக்கு 1896 தெருவிளக்குகள் மட்டுமே அமைக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றன. அரசின் நெறிமுறைபடி குறுகிய சாலைகள் மற்றும் தெருக்களில் 30 மீட்டர் இடைவெளிக்கு ஒருதெருவிளக்கு அமைக்கப்பட வேண்டும். இந்நகரின் பிரதான போக்குவரத்துசாலையான நான்குரத வீதிகள் 20 மீ அகலத்திற்குமேல் உள்ளதாலும், தற்போது ஒருபுறம் மட்டும் தெருவிளக்கு வசதி இருப்பதாலும், பொதுமக்கள் போக்குவரத்திற்கு தேவையான ஒளிவசதி இல்லாமல் உள்ளன. எனவே, வழிபாடு, சுற்றுலாதளமான இந்நகரில் உள்ள பொதுமக்கள் மற்றும் வெளியூர்களிலிருந்து வரப்பெறும் பக்கதர்கள் சுற்றுலா பயணிகளில் இரவுநேர போக்குவரத்து வசதிக்கு நான்குரதவீதிகளில் இருபுறமும் மற்றும் நகரின் பிரதான அனுகுசாலைகளிலும் 260எண்கள் ஆற்றல் சேமிப்புடன் கூடிய LED விளக்குகள் Ornamental pole அமைக்கும் பணிக்கும் இப்பணிக்கான மதிப்பீடு செலவினம் ரூ. 262.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குனருக்கு பிரேரணை சமர்ப்பிக்கமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு–**

1) பொதுமக்களின் நலன் கருதி இந்நகரின் முக்கிய நான்குரத வீதிகளில் ஆற்றல் சேமிப்புடன் கூடிய 260 எண்கள் ஆற்றல் சேமிப்புடன் கூடிய LED விளக்குகள் அமைக்கும் பணிக்கு அரசின் நிர்வாக அனுமதி பெற பிரேரனை சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

2) இந்நகராட்சியின் நிதி நிலைமையை கருதி பணிக்கான மதிப்பீடு செலவினம் ரூ. 262.00 இலட்சத்திற்கு அரசின் KFW நிதி /சிறப்பு திட்டநிதி மூலம் மானியமாக நிதி ஆதாரம் கோரலாம்.

**ந.க.எண். 2931/2021/இ2**

**21)** சிதம்பரம் நகராட்சி மற்றும் அண்ணாமலை நகர் பேரூராட்சிக்கு கொள்ளிடம் ஆற்றினை நீர் ஆதாரமாக கொண்டு 127 கோடி மதிப்பீட்டில் கூட்டு குடிநீர் அபிவிருத்தி திட்டம் 2021–2022ல் செயல்படுத்த சட்ட மன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்பினை நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது மாவட்ட ஆட்சியரின் அறிவுறுத்தலின்படி கீழ்காணும் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கு, வரப்பெற்ற பட்டியல் தொகையை வருவாய்நிதி 2021–2022ன் கீழ் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | நாளிதழ்விபரம் | விளம்பரநாள் | தொகை |
|---|---|---|---|
| 1 | தினசெய்தி | 26.12.2021 | 10000 |
| | | கூடுதல் | 10000 |

**அலுவலகக் குறிப்பு :**மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3254/2021/இ1)**

**22)** சிதம்பரம் நகராட்சி பகுதியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) 2021–22கீழ் புளிச்சமேடு பகுதியில் நவீன எரிவாயு தனகமேடை அமைத்தல் மற்றும் நடராஜா கார்டன் பகுதியில் புதிய பூங்கா உருவாக்குதல் பணிகளுக்குரிய ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை கீழ்காணும் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கு, வரப்பெற்ற பட்டியல் தொகையை வருவாய் நிதி 2021–22ன் கீழ் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | நாளிதழ்விபரம் | விளம்பரநாள் | தொகை |
|---|---|---|---|
| 1 | Flame Advertising Company Pvt Ltd, Chennai | 02.12.2021 | 32335 |
| | | கூடுதல் | 32335 |

**அலுவலகக் குறிப்பு :**மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3469/2021/இ1)**

**23)** சிதம்பரம் நகராட்சியின் சாதனைகளை மாவட்ட ஆட்சியரின் அறிவுறுத்தலின்படி கீழ்காணும் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கு, வரப்பெற்றபட்டியல் தொகையை வருவாய்நிதி 2021–22–ன்கீழ், வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | நாளிதழ்விபரம் | விளம்பரநாள் | தொகை |
|---|---|---|---|
| 1 | மாலைதமிழகம் | 16.01.2020 | 14700 |
| | | கூடுதல் | 14700 |

**அலுவலகக் குறிப்பு :**மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3267/2019/இ1)**

**24)** சிதம்பரம் நகராட்சி 1873–ஆம் ஆண்டு நகராட்சியாக்கப்பட்டு தற்பொழுது 33 வார்டுகளுடன் 4.82 சதுர கி.மீ. பரப்பளவைக் கொண்ட நகரமாகும். சிதம்பரம் நகரிலிருந்து மாவட்ட தலைநகரமான கடலூர் வடகிழக்குப் பகுதியில் 55 கி.மீ தொலைவிலும், பண்ருட்டி மற்றும் வடலூர் நகரங்கள் வடபகுதியிலும் விருத்தாசலம் நகரம் மேற்கு பகுதியிலும் கும்பகோணம் மற்றும் மயிலாடுதுறை நகரங்கள் தெற்கு பகுதியிலும் சிறந்த போக்குவரத்து வசதியுடன் அமைந்துள்ளன. மேலும் சிதம்பரம் வருவாய் வட்டத்தின் தலைமையிடமாக உள்ளது. 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி நகரின் மக்கள் தொகை 62,153 ஆகும்.தற்பொழுது உள்ள மக்கள் தொகை 64,500 ஆகும்.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானிய கோரிக்கை அறிவிப்பு பத்தி 14ல் அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் காய்கறி அங்காடிகளில் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ள அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளது. சிதம்பரம் நகராட்சி மேலரதவீதி– கொத்தவால் ஸ்டேஷன் தெருவில் உள்ள காய்கறி அங்காடி கட்டிடத்தில் தினசரி பொதுமக்கள் காய்கறிகளை கொள்முதல் செய்யும் அத்தியாவசிய இடமாக பயன்படுத்தி வருகின்றனர். மேலும் அருகில் உள்ள நகராட்சி எல்லையையொட்டிய கிராமப்பகுதியிலிருந்து மக்கள் வந்துபோகும் முக்கிய காய்கறி அங்காடியாக உள்ளது.

மேற்படி காய்கறி அங்காடி கட்டிடம் சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட கட்டிடமாகும். தற்போது மேற்படி கட்டிடத்தில் தெற்கு பகுதி, வடக்கு பகுதி மற்றும் மேற்கு பகுதிகளில் மங்களூர் ஓடுகளால் கட்டப்பட்ட மேற்கூறை கட்டிடமாக உள்ளது. மேற்கூரையில் உள்ள ஓடுகள் மற்றும் மரச்சட்டங்கள் அனைத்தும் பழுதடைந்து மழைக்காலங்களில் மழைநீர் காய்கறி அங்காடி உள்ளே ஒழுகும் நிலை உள்ளது. மேலும் ஓட்டு கட்டிடங்கள் மற்றும் ஆர்.சி.சி கட்டிடங்களின் சுவர்களில் விரிசல் ஏற்பட்டு மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளது. இதனால் வியாபாரிகள் மற்றும் பொதுமக்களுக்கு பெரிதும் அச்சுரத்தலாக உள்ளது.

எனவே, பொதுமக்கள் மற்றும் வியாபாரிகளின் பாதுகாப்பு நலன் கருதி மேற்படி கட்டிடத்தின் அனைத்து பகுதிகளையும் இடித்து புதிய தினசரி நாளங்காடி கட்டிடம் கட்டுதல் பணிக்கு மதிப்பீடு ரூ.280.00 இலட்சத்திற்கு தயார் செய்து அரசின் முழுமான்யத்துடன் நிதி ஒதுக்கீடு கோரியும் நிர்வாக அனுமதி வேண்டி கருத்துரு 30.09.2021 தேதிய தீர்மான எண். 257–ன்படி நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

தினசரி நாளங்காடி தற்பொழுது அமைந்துள்ள இடம் அனைத்து அடிப்படை வசதிகளுடன் புதிய நாளங்காடி கட்டிடம் கட்டுவதற்கு போதிய இடவசதி இல்லாத காரணத்தால், வடக்கு பிரதான சாலையில் நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண். 4, பிளாக். 3, நகரளவு எண். 76/1A,2A இடத்தில் புதிய தினசரி நாளங்காடி கட்டிடம் கட்டுவற்கு 2021–22–ம் ஆண்டு பொதுப்பணித்துறை விலைவிகிதத்தின்படி ரூ.6.00 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யபட்டுள்ளது. எனவே, அரசின் மான்யம் பெற்று இப்பணியை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டி திட்டப்பிரேரணையை நகராட்சி நிர்வாக இயக்குநரகத்திற்கு அனுப்பிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அரசிடம் உரிய அனுமதிகள் பெற்று நிதியுதவி பெறுவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநரத்திற்கு முன்மொழிவினை சமர்ப்பிக்கலாம்.

ந. க. எண்.2727/ 2021/ இ1

**25)** இந்நகராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு வரும் மேலரதவீதி, கீழரதவீதி, உப்புகடைசந்து, வைப்புசாவடி, குஞ்சிரமூர்த்தி விநாயகர் தெரு, அம்பேத்கார் நகர், சுபோதையா நகர், குருவையர் தெரு, கொத்தவால் ஸ்டேஷன் தெரு, கஞ்சித்தொட்டி சந்திப்பு ஆகிய இடங்களில் உள்ள பொது கழிவறைகளின் கழிவு நீர் வெளியேற்றம் புதிய பாதாள சாக்கடை திட்டத்தில் நடைபெற குழாய் இணைப்புகள் மாற்ற வேண்டியுள்ளன. மேலும் பெருமழை சமயங்களில் தெற்குரத வீதி, மேற்கு ரதவீதி, கீழ்சன்னதி நுழைவு வாயில் மற்றும் கிள்ளை சாமியார் தெருக்களில் தேங்கும் மழைநீரால் பொதுமக்கள் போக்குவரத்துக்கு இடையூறு இல்லாத வகையில் எட்டு எண்கள் வடிகால் குழாய்கள் அமைக்க வேண்டியுள்ளன. பொதுமக்கள் சுகாதார நலன் கருதி இப்பணிகள் மேற்கொள்ளவும், இப்பணிக்கான மதிப்பீடு செலவினம் ரூ.95,000/—க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

1) பதிவு செய்யலாம்.
2) இப்பணிக்கான செலவினத்தினை 2021—22—ம் நிதியாண்டு வருவாய் நிதியில் வரவு செலவு பட்டியலில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3) பணியின் அவசிய அவசரம் கருதி தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 4604/2020/இ1)

**26)** சிதம்பரம் நகராட்சி 15—வது நிதிக்குழு மான்யம் 2021—22—ம் ஆண்டிற்கான Tied & Untied தலைப்பின்கீழ் பணிகள் மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. இதில் Tied தலைப்பின்கீழ் 92.00 இலட்சமும், Untied தலைப்பின்கீழ் 62.00 இலட்சமும் நிதி ஒதுக்கீடு மற்றும் விடுவிக்கப்படவுள்ள நிதியின் விபரம் படிவம் —2ல் பெறப்பட்டுள்ளது. இதில் Untied தலைப்பின்கீழ் 62.00 இலட்சத்திற்கு கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள விபரம் அளிக்கப்பட்டது.

| வ.எண். | பணிகளின் விபரம் | மதிப்பீடு தொகை தொகை ரூ. |
|---|---|---|
| | **15th CFC - Untied Grant 2021-22** | |
| 1 | சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 13, காத்தா சந்து மற்றும் வார்டு எண். 27, அப்பாவு சந்தில் விடுபட்ட பகுதிகளில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணி. | 15.00 |
| 2 | சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 1, பாரதி பூந்தோட்ட தெரு மற்றும் குறுக்கு தெருவில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி. | 2.00 |
| 3 | சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 13, காத்தா சந்து மற்றும் வார்டு எண். 31, தெற்கு வாணிய தெருவில் மழைநீர் வடிகால் அமைத்தல் பணி. | 6.00 |

| | | |
|---|---|---|
| 4 | தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் | 39.00 |
| | **கூடுதல்** | **62.00** |

மேற்படி பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் அனுமதி கோரியதில் தெருவிளக்குப் பணிகளுக்கு பதிலாக (ரூ.39.00 இலட்சம் ) மாற்றுப்பணியாக தேர்வு செய்து பட்டியல் அனுப்ப அறிவுறுத்தப்பட்டது. இதன் அடிப்படையில் தற்போது பேருந்து நிலையம் முன்புறம் உள்ள பொதுக்கழிப்பிடம் கட்டப்பட்டு சுமார் 20 வருடங்களுக்கு மேல் ஆனதால் மிகவும் பழுதடைந்து பொது சுகாதாரம் பாதித்த நிலையில் இருந்தது. எனவே, புதியதாக ரூ. 22.60 இலட்சம் மதிப்பீட்டில் பேருந்து நிலையத்தின் கிழக்கு பகுதியில் புதிய கழிப்பிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஆனால் நகராட்சியில் போதிய நிதி நிலை இல்லாததால் இதுநாள்வரை பணி துவங்கப்படாமல் நிலுவையாக உள்ளது. பொதுமக்களின் சுகாதார நலன் கருதி, மேற்படி பணியை 15th CFC Untied தலைப்பின் கீழ் மாற்றம் செய்து, இதே ஒப்பந்தப்புள்ளியை ஏற்று ஒப்பந்தப்புள்ளி கோரிய ஒப்பந்ததாரர் திரு எஸ். கிருஷ்ணமூர்த்தி என்பவரின் மூலமே பணியை துவங்கி முடிக்கவும் மேலும் எதிர்வரும் 15th CFC Untied தலைப்பின்கீழ் பெறப்படும் நிதியை கருத்தில்கொண்டு மேற்படி வ.எண்.1,2, மற்றும் 3 ஆகிய பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள உரிய மேல்நடவடிக்கை தொடரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) சிதம்பரம் நகராட்சி நிதி நிலையினை கருத்தில்கொண்டு பேருந்து நிலைய கிழக்கு பகுதியில் ரூ.22.60 இலட்சம் மதிப்பீட்டில் நவீன கழிப்பிடம் கட்டும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதை ஏற்று அதே ஒப்பந்ததாரர் மற்றும் அதே விலை விகிதத்தில் மேற்படி பணியினை 15th CFC Untied தலைப்பின்கீழ் தெருவிளக்கு பணிக்கு பதிலாக பொதுகழிவறை கட்டும் பணி மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

3) எதிர்வரும் 15th CFC untied தலைப்பின்கீழ் பெறப்படும் நிதியை கருத்தில்கொண்டு மேற்படி வ.எண்.1, 2 மற்றும் 3 ஆகிய பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள உரிய மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 3444/2021/இ1)**

**27)** இந்நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் 33 வார்டுகளிலும் தூய்மை பணி மேற்கொள்வதற்கு தேவைப்படும் 153 தூய்மை பணியாளர்களின் பணிக்காலம் 31.12.2021 உடன் முடிவடைய உள்ளது. தற்போது மழைக்காலமாக உள்ளதாலும், மேற்படி பொது சுகாதாரப் பணி இன்றியமையாத பணியாக உள்ளதாலும் 153 தூய்மை பணியாளர்களின் பணி மிகவும் அத்தியாவசியமாக உள்ளது எனவும் , தூய்மை பணியாளர்களின் பணி இன்றியமையாதது எனவும், சுகாதார ஆய்வர் தெரிவித்துள்ளார். மேற்படி பணியாளர்களின் பணியினை நீட்டிப்பு செய்யக் கோரியதன் அடிப்படையில் தற்போது பணிபுரியும் மகளிர் சுய உதவிக்குழுவின் விருப்பம் கோரியதற்கு கடந்த 13.12.2021 நாளிட்ட கடிதம் வாயிலாக M/s. கங்கை மகளிர் சுயஉதவிக்குழு விருப்பம் தெரிவித்துள்ளார். எனவே, இப்பணியின்

அவசியம் கருதி டெங்கு கொசு ஒழிப்பு பணியாளர்களின் பணியினை 01.01.2022 முதல் 28.02.2022 வரை நீட்டிப்பு செய்தும் அதற்கான செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, நகராட்சி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி நீட்டிப்பு உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 882/2021/எச்1)**

**28)** இந்நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் டெங்கு கொசு ஒழிப்பு பணிக்கு 50 டெங்கு கொசு ஒழிப்பு பணியாளர்களின் பணிக்காலம் 31.12.2021 உடன் முடிவடைய உள்ளது. தற்போது மழைக்காலமாக உள்ளதாலும், டெங்கு கொசு ஒழிப்பு பணி இன்றியமையாத பணியாக உள்ளதாலும் 50 டெங்கு கொசு ஒழிப்பு பணியாளர்களின் பணி மிகவும் அத்தியாவசியமாக உள்ளது எனவும் , மேலும் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் தடுப்பூசி முகாம் நடத்திடவும், டெங்கு கொசு ஒழிப்பு பணியாளர்களின் பணி இன்றியமையாதது எனவும், சுகாதார ஆய்வர் தெரிவித்துள்ளார். மேற்படி பணியாளர்களின் பணியினை நீட்டிப்பு செய்யக் கோரியதன் அடிப்படையில் தற்போது பணிபுரியும் மகளிர் சுய உதவிக்குழுவின் விருப்பம் கோரியதற்கு கடந்த 13.12.2021 நாளிட்ட கடிதம் வாயிலாக M/s. கங்கை மகளிர் சுயஉதவிக்குழு விருப்பம் தெரிவித்துள்ளார். எனவே, இப்பணியின் அவசியம் கருதி டெங்கு கொசு ஒழிப்பு பணியாளர்களின் பணியினை 01.01.2022 முதல் 31.03.2022 வரை நீட்டிப்பு செய்தும் அதற்கான செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, நகராட்சி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி நீட்டிப்பு உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 2481/2021/எச்1)**

**29)** இந்நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் குப்பை அள்ளும் பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் வாகனங்களுக்கு தேவைப்படும் 9 ஓட்டுனர்களின் பணிக்காலம் 31.12.2021 உடன் முடிவடைய உள்ளது. தற்போது மழைக்காலமாக உள்ளதாலும், ஓட்டுனர் பணி இன்றியமையாத பணியாக உள்ளதாலும் 9 ஓட்டுனர்களின் பணி மிகவும் அத்தியாவசியமாக உள்ளது எனவும் , மேலும் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் ஓட்டுனர்கள் பணி இன்றியமையாதது எனவும், சுகாதார ஆய்வர் தெரிவித்துள்ளார். மேற்படி பணியாளர்களின் பணியினை நீட்டிப்பு செய்யக் கோரியதன் அடிப்படையில் தற்போது பணிபுரியும் மகளிர் சுய உதவிக்குழுவின் விருப்பம் கோரியதற்கு கடந்த 13.12.2021

நாளிட்ட கடிதம் வாயிலாக M/s. கங்கை மகளிர் சுயஉதவிக்குழு விருப்பம் தெரிவித்துள்ளார். எனவே, இப்பணியின் அவசியம் கருதி 10 ஓட்டுனர்களின் பணியினை 01.01.2022 முதல் 31.03.2022 வரை நீட்டிப்பு செய்தும் அதற்கான செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, நகராட்சி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி நீட்டிப்பு உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 1201/2021/எச்1)**

**இடம்: சிதம்பரம்**
**நாள்: 31.12.2021**

**தனி அலுவலர்,**
**சிதம்பரம் நகராட்சி**